OPEN ACCESS

Manuscript ID: TAM-070420236252

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.01.2023

Accepted: 23.03.2023

Published: 01.04.2023

Citation:
Kavitha, S., and K. Raja Lakshmi. "Makeup Methods of Sangam Era." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 4, 2023, pp. 47–52.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6252

*Corresponding Author:
kavithatamil322@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Makeup Methods of Sangam Era

**S. Kavitha**
*Guest Lecturer, Part Time Research Scholar*
*Government Womens Arts College, Sivagangai, Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0009-6899-3057*

**K. Raja Lakshmi**
*Associate Professor, Tamil Department*
*Government Womens Arts College, Sivagangai, Tamil Nadu, India*

**Abstract**
After the baby is born, makeup starts within seconds. People of the Sangam era lived in harmony with nature and ate natural foods, so their body looked beautiful. The narrator's comments are mostly in the autographs They made up in comparison with nature. Face, cup eyes, bow eyebrows, conical neck, pearly teeth, lotus hands, banana leg, flagellum, and red fingers are all for the body parts. Likened to parables. They excelled in art, culture, gift, valor, education. He lived his life very tastefully and fully. Both men and women led a good family with love, romance and valor in their inner and outer lives. In order to distinguish their appearance from others, they apply make-up to their body parts such as head, eyes, nose, mouth, ears, neck, face, hands, fingers, chest area, pelvis, both legs, toes and feet. Both men and women wear makeup, and women are more into makeup! Men wear less make-up. Neck painting, embalming; And the purpose of this science is to study the tools used for makeup.

**Key Words:** Beautification, Dressing Makeup, Sangam Literature

# சங்க கால ஒப்பனை முறைகள்

**ச. கவிதா**
கௌரவ விரிவுரையாளர்
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
அரசு மகளிர் கலைக்கல்லூரி, சிவகங்கை

**முனைவர் கூ. இராஜலெட்சுமி**
இணைப் பேரசிரியர், தமிழ்த்துறை
அரசுப்மகளிர் கலைக்கல்லூரி, சிவகங்கை

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க கால மக்கள் இயற்கையான உணவுகளை உட்கொண்டு வாழ்ந்ததால் அவர்களின் தேகமானது அழகுடன் காணப்பட்டது. அகப்பாடல்களில் தலைவியின் வர்ணனைகள் பெரும்பாலும் இயற்கையுடன் ஒப்பிட்டு ஒப்பனை செய்யப்பட்டது. மதிமுகம், குவளைக்கண், வில்புருவம், சங்குவளை கழுத்து, முத்துப்பல், தாமரை கைகள், வாழைத்தண்டு கால், கொடி இடையர், செங்காந்தள் விரல்கள் இவையனைத்தும் உடல் உறுப்புகளுக்கு உவமைகளாக ஒப்புமைப்படுத்தப்பட்டன. அகவாழ்க்கையில் ஆண்களும், பெண்களும் சிறந்து இல்லறம் நடத்தினர். பிறருக்கு தோற்றத்தை வேறுபடுத்திக் காட்டு விதமாக தங்களுடைய உடல் உறுப்புகளான தலை, கண், மூக்கு, வாய், காது, கழுத்து, முகம், கைகள், விரல்கள், மார்பு பகுதி, இடுப்புப்பகுதி கால்கள், கால் விரல்கள், பாதம் அனைத்திற்கும் ஒப்பனை செய்துகொண்டனர் ஒப்பனைகளை அதிகம் ஆர்வம் கொண்டவர்கள் பெண்களே!. தொய்யில் வரைதல், செம்பஞ்சு குழம்பூசுதல், வாசைன திரவியங்கள் மற்றும் பூ ஒப்பனைக்குப் பயன்படுத்தபடும் கருவிகள் பற்றி ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *அழகுப்படுத்துதல், ஆடை ஒப்பனைகள், சங்க இலக்கியம்*

## முன்னுரை

மனித குல வளர்ச்சியில் தமிழ்ச் சமுதாயம் தொன்மையான நாகரிகத்தையும், பண்பாட்டையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதுபோல், தமிழினம் வாழ்வியல் சார்ந்த பல்வகைக் கலைகளை வளர்த்தெடுத்து ஆக்கப் பூர்வமான பண்பாட்டு மரபுகளைக் கட்டமைத்த பெருமையும் நிலைத்து நிற்கிறது. கலைகள் மனித சமூக வளர்ச்சியின் உச்சம் என்று குறிப்பிடுவர். அத்தகைய கலைகளில் தமிழ்ச் சமுதாயம் சிறந்து விளங்கியுள்ளதை அறியமுடிகிறது.

## ஒப்பனைக் கலை அறிமுகம்

ஒப்பனைக் கலை என்பது மனித முருகியல் உணர்வு, கலையும் கலைத்திறனையும் வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாம். மனித நாகரிக வரலாற்றில், ஓர் இனக்குழு சார்ந்த சமூக மக்களின் அழகு உணர்ச்சியின் அளவுகோலாகவும் அமைவது ஒப்பனைக் கலை. மேலும் சமூக மக்களின் கற்பனை வளத்தையும் செல்வச் செழிப்பையும் வெளிப்படுத்துவதாகவும் ஒப்பனைக் கலை அமைந்துள்ளது. ஒப்பனைக் கலையில் ஆடைகளும், அணிகலன்களும், வாசனைப் பொருட்களும், ஒப்பனை செய்யப்பயன்படும் பல்வகைப் பொருட்களும் பயன்படுகின்றன.

சங்க காலத் தமிழர்கள், தங்களை அழகுபடுத்திக்கொள்ள மேற்கொண்ட ஒப்பனைகளையும், ஒப்பனைக்குப் பயன்படுத்திய பொருட்களையும், கண், முகம், நகம், விரல், தலை போன்ற உறுப்புகளுக்குச் செய்யப்பட்ட ஒப்பனைகளையும், மற்றும், ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமியர், அரசர், கணிகையர், கலைஞர்கள், கடவுளர் ஆகியோர் செய்து கொண்ட ஒப்பனைகளையும் சங்கப் பாக்களை அடிப்படையாகக்கொண்டு எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

### ஒப்பனை - சொற்பொருண்மை விளக்கம்

ஒப்பனை என்பது குறித்து அகராதிகள் விளக்கம் அளித்துள்ளது போல், அறிஞர்களும் பல்வேறு கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில் "ஒப்பனை என்பது அலங்காரம், அணிஇயல்[1] என்று அகரமுதலி விளக்கம் தருகின்றது. ஒப்பனை என்ற சொல்லின் பொருளானது, "அழகூட்டுதல் என்பது பொருள், இருக்கின்ற அழகை மிகைபடுத்திக் காட்டுதல், இருக்கின்ற அழகை வெளிக்காட்டுதல், அழகு இல்லாத பொருளையும் அழகாக மாற்றுதல்" போன்ற பொருண்மைகளைப் பெறமுடிகின்றன.

ஒப்பனை என்ற சொல்லிற்கு, "அழகுபடுத்தல் என்று பொருள். இதற்குப் புனைதல், கைசெய்தல், வேய்தல், பொறிபு, அலங்கரித்தல், வனைதல், புசல், அணிதல், மண்ணல் என்ற பல பொருள்களுண்டு" என்று வரலாற்றுக் களஞ்சியம் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில் ஒப்பனை என்னும் சொல்லிற்கு இணையாக, "கோலம் செய்து" என நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.

### மகளிர் நீராடல்

ஒப்பனை செய்து கொள்வதற்கு முன்னதாக உடல்தூய்மை செய்து கொள்வது அவசியமான தொன்றாகும். எனவேதான், வள்ளுவர் உடல்தூய்மை நீரால் அமையும், மனத்தூய்மை வாய்மையினால் அமையும் என்பதை,

**"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்"**

என்று குறிப்பிட்டுள்ளார். உடல்தூய்மை என்பது தோலின் தூய்மையாகும். தோல் நோயின்றி நலமுடன் இருக்க நல்ல நீரில் நீராட வேண்டும். சங்க காலம் முதற்கொண்டு பிற்காலம் வரைக்கும் உடல்தூய்மையைக் குறித்தும், நீராடல் பற்றியும் சான்றுகள் இடம்பெற்றுள்ளன. பழந்தமிழரின் நீராடல் குறித்து, பரிபாடல், குறுந்தொகை போன்ற சங்கப் பனுவல்களில் குறிப்புகள் பதிவாகியுள்ளன. ஒப்பனை செய்வதற்கு முன்னதாக நீராடல் முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீராடுவதற்கு முன்னதாக மகளிர் ஒப்பனை செய்து கொண்டுள்ளனர். அதுபோல், நீராடிய பிறகும் தங்களை ஒப்பனை செய்துகொண்டுள்ள செய்தியைப் பரிபாடல் வழியாக அறியமுடிகிறது. அவ்வகையில், மகளிர் நீராடல் செய்வதற்குத் உரிய ஒப்பனைப் பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர், என்பதை

**"புகை, பு, ஆவி ஆராதனை, அழல் பலஏந்தி
நகை அமர் காதலரை நாளணிக் கூட்டும்
வகை, சாலும், வையை வரவு"**

***(பரி.11.13)***

எனஅறியலாம். அதாவது, மகளிர்நீராடியபிறகு தாங்களும், தங்களது கணவர்களும் ஒப்பனை செய்து கொள்வதற்குரிய பொருட்களையும் கூந்தலை உலர்த்துவதற்கு வேண்டிய அகில் கட்டைகள், வேள்வியிடும் பொருட்கள், நகைகள், சந்தனம், சாம்பிராணி, மற்றும் புதிய ஆடைகள் ஆகியவற்றை எடுத்துச் சென்றார்கள்.

### ஈரணி ஆடை சுற்றிய மகளிர்

அகிற்புகையினால் தங்கள் உடலின் ஈரத்தை உலர்த்த மகளிர், நீராடுங் காலத்து மகளிர் "ஈரணி" என்பதை அணிந்து கொண்டனர். இத்தகைய வெண்மையான ஆடையினைப் போர்த்திக் கொண்டனர், சில மகளிர் வேலைப்பாடுடைய வெண்மையான துணியால் தங்கள் கூந்தல் மேல் சுற்றியிருந்தனர் என்பதை,

**"மதி உண் அரமகளென, ஆம்பல் வாய் மடுப்ப மீப்பால் வெண் துகில் போர்""""க்குநா, புப் பால் வெண் துகில் சூழுப்பக் குழல் முறுக்குநா"**
**(பரி.80.81)**

என்ற பரிபாடல் வரியில் அறியலாம் அகநானூற்றுப் பாடல் 166 இல்

**"வதுவை ஈரணிப் பொலிந்த நம்மொடு புதுவது வந்த காவிரி ஆடியோரே**
**"(அகம்.166)"**

என்று குறிப்பிடப்பட்டுள்ளன. அகநானூற்றுப் பாடலான, 266 இல்,

**"இளந்துணை மகளிரொடு ஈரணிக் கலைஇ"**
**(அகம்.266)**

என்று இடம்பெற்றுள்ளது. மேற்குறித்த சான்றுகளில் இருந்து, மகளிர் உடலின் ஈரம் உலர்த்திய பின்னதாக, வெண்மைய நிறம் கொண்ட ஆடையினை அணிந்துகொண்டதையும், மேலும், சில மகளிர் தங்கள் கூந்தலின் ஈரத்தைப் போக்குவதற்கு வெண்மை நிறத் துணிகளைக் கூந்தலில் சுற்றியிருந்ததையும் காண்கின்றபோது, ஒப்பனைக்கு முன்னதாக இத்தகைய நிகழ்வுகள் இயல்பாகவே அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

துகில் ஆடையை ஒப்பனை செய்துகொண்ட மகளிர் நீராடுகின்ற போதும், நீராடி பின்னதாகவும் துகில் என்னும் ஆடையைப் பயன்படுத்தி ஒப்பனை செய்துகொண்டுள்ள செய்தியினை அறியமுடிகின்றது.
சான்றாக,

**"வெண் துகில் சூழுப்பக் குழல் முறுக்குநர் செங் குங்குமச் செழுஞ் சேறு"**
**(பரி.10.79.82)**

என்ற வரிகளில், நீராடிய பின்னதாக துகில் என்னும் ஆடையை மகளிர் அணிந்துள்ளனர் என்பதை அறியலாம்.

## புட்டகம்

புட்டகம் என்னும் சொல் புடவையைக் குறிப்பதாகும். இப்புட்டகத்தை மகளிர் நீராடிய போது, ஒப்பனை செய்து கொண்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. இது குறித்துப் பரிபாடல்,

**"புட்டகம் பொருந்துவ புனைகு வோரும்"**
**(பரி.12.17)**

என்று குறிப்பிட்டுள்ளது.

## தாளிதம் அணிந்த மகளிர்

தாளிதம் என்னும் ஒருவகையான ஆடையை மகளிர் அணிந்துள்ளனர். இவ்வாடையானது, மிகவும் நுண்மையாகவும், இருந்துள்ளது. இது குறித்து,

**"புனல் மண்டி ஆடல் புரிவான், சனம், மண்டி**
**தூளித நொய்ந் நூல் சரணத்தர், மேகலை ஏணிப்படுகால் இறுகிறுகத் தாள் இடீஇ." (பரி.9-16)**

என்று பதிவாகியுள்ளது.

இவ்வரிகள் தரும் பொருளானது, வையையின் புதுப்புனல் வெள்ளத்தில் புகுந்து நீராடுவதற்காக மகளிர் செல்லத் தொடங்கினர். நீராடிய பிறகு, மெல்லிய நூலால் ஆன தாளிதம் என்னும் ஒருவகையான ஆடையை அணிந்தனர்.

## பட்டு ஆடைகள் ஒப்பனை

மகளிர் பட்டு ஆடைகளை ஒப்பனை செய்துள்ளனர். அத்தகைய பட்டு ஆடைகள் இரவு நேரத் தூக்கத்தின்போது உடுத்தியுள்ளனர். இவ்வாடையை அணிந்தது குறித்து செய்தியைப் பின்வரும் வரிகளில் இருந்து அறியலாம். சான்றாக,

**"அறியாமையின் அழிந்த நெஞ்சின் எற்றுஇயல் எழிநடைப் பொலிந்த மொய்ம்பின்"**
**(அகம்.236)**

இவற்றிலிருந்து, மகளிர் இரவு நேரங்களில் பட்டு ஆடைகளை அணிந்துள்ளனர் என அறியமுடிகிறது

## ஆடல் மகளிரின் ஆடை ஒப்பனைகள்

பாணர்களின் மக்களாகிய பெண்கள் துகில் என்னும் ஆடைகளை உடுத்தியுள்ளனர். இத்துகில் மென்மையானதாகவும், அதே

வேளையில், இவ்வாடை பூந்தொழில் வேலைப்பாடு கொண்டும் அமைந்துள்ளதை அறியமுடிகிறது. இதுகுறித்து, பரிபாடல் வரிகளில் இடம்பெற்றுள்ள கருத்தினைப் பின்வருமாறு எடுத்துரைக்கலாம்.

**"வனைந்துவர லிளமுலைப்**
**புந்துகி லல்குற் றேம்பாய் கூந்தல்**
**மின்னிழை விறலியர் நின்மறம்"**

**(பரி.21.4-6)**

எனும் வரிகளில் இருந்து அறியமுடிகின்றது. இவ்வாறு இல்லத்தில் இருக்கின்ற மகளிர் முதல் கணிகையர் வரை பல்வகையான ஆடைகளைப் பயன்படுத்தித் தங்களை ஒப்பனை செய்துகொண்டுள்ளதை மேற்குறித்த சான்றுகள் வழியாக அறியமுடிகின்றது.

## ஆடவர் செய்து கொண்ட ஒப்பனைகள்

ஆண்கள் அணிந்திருந்த கழுத்தணி "புண்" என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. சான்றாக, மதுரை நகரில் இருந்த பரத்தையரை நாடிச் சென்ற ஆண் ஒருவன் நுண்புண் என்னும் கழுத்தணியை அணிந்திருந்ததை மதுரைக்காஞ்சி,

**"பெரும் பல்குவளைச் சுரும்பு படு பல்மலர்**
**திறந்து மோந்தன்ன சிறந்து கமழ்நாற்றத்து**
**கொண்டல் மலர்ப் புதல் மானப் பூ வேய்ந்து**
**நுண் பூண் ஆகம் வடுக்கொள முயங்கி**
**மாயப்பொய் பல கூட்டி, கவவுக்கரந்து"**[53]

என்று குறிப்பிடுகிறது. இப்பாடலின் பொருளானது, புறமண்டிலத்தைச் சார்ந்தவர்களும் உள்ளூரில் உள்ளவர்களுமாய்த் தம் வடிவழகை விரும்பி வந்த பல செல்வம் உடையவர்களைப் பல வஞ்சனையுடைய பொய் வார்த்தைகள் கூறி, முதலில் அழைத்துக் கொண்டு சென்று, பின்னர் அவருடைய நுண்ணிய புண்களையுடைய மார்பினைத் தம் மார்பில் வடுப்படும்படி தழுவுவர் என்பதாகும். இவற்றிலிருந்து, ஆண்கள் மென்மையான பூண் என்னும் கழுத் தணிகலனை அணிந்திருந்தனர் என்பதை மேற்குறித்த பாடல் புலப்படுத்துகிறது. மேலும், புண் என்பது பேரணிகலன் என்றும், தொன்று படு பூண் என்பது பலநாளும் அணியும் அணிகலன் என்றும் குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகிறது.

இத்தகைய பூண் அணிகலனை சங்கத் தலைவன் ஒருவன் அணிந்து வந்தான் என்பதை,

**"மைந்து இறை கொண்ட, மலர்ந்து ஏந்து அகலத்து**
**தொன்று படுநறுந்தார் புணொடு பொலிய**
**செம்பொறிக்கு ஏற்ற, வீங்கு இறைத் தடக்கையின்**
**வண்ண வரிவில் ஏந்தி அம்பு தெரிந்து**
**நுண்வினைக் கச்சைத் தயக்கு அறக் கட்டி**
**துயல் வருந்தோறும் திருந்து அடிக்கலான"**

என்று குறிப்படுகிறது. கரிகாற்பெருவளத்தான், பொன்னால் ஆன பெரிய அணிகலன்களை அணிந்தவனாகப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. அதாவது, பொன்னால் ஆகிய தொடியணிந்த அவன் புதல்வர்கள், ஓடியாடி விளையாடுவதாலும், உடல் முழுவதும் அணிகலன்களை அணிந்த மகளிர், தங்கள் தாமரை மொட்டுப் போன்ற முலைகளால் தழுவுவதாலும், புசிய அரசர் அரசியர் செய்து கொண்ட ஒப்பனை சேரமன்னன் ஏழு அரசர்களைப் போரில் வென்று, அவர்களின் ஏழுமுடிகளையும் ஒன்று சேர்த்துதான் அணிந்து கொண்டான் என்பதைப் பதிற்றுப்பத்து பாடல் வழியாக அறிய முடிகிறது.

பண்டைய காலத்தில் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோர் ஆட்சி புரிந்துள்ளதை வரலாற்றுச் சான்றுகள் வழியாக அறியமுடிகின்றது. பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருந்த அரசர்கள், கலிங்கம், கச்சு, கச்சை, துகில், அறுவை, படாஅம், முதலிய ஆடைகளை உடுத்தியுள்ளனர். ஆய் என்னும் மன்னன் மரத்தடியில் இருந்த இறைவனுக்குக் கலிங்கத்தைக் கொடுத்ததாகவும், (சிறுபாண்.95-96), பேகன் என்ற குறுநில மன்னன், மயிலுக்குக் கலிங்கம் (சிறுபாண். 85-87) என்கிற படாஅம் (புறம்.14-11)

ஆடையைப் போர்த்தியதாகவும் சான்றுகள் காணப்படுகின்றன.

கலிங்கம் என்கிற ஆடை, படாஅம் என்ற சொல்லாட்சியிலும் ஆளப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இவ்வாடை நிலத்தைத் தொடுமாறு தாழ்வாக உடுத்தப்பட்டுள்ளது போல், துவைத்து கஞ்சியூட்டப்பட்டு உடுத்தப்பட்டுள்ளதை

**"சோறாமை வுற்ற நீருடைக் கலிங்கம்**
**ஊடையணி பொலியக் குறைவின்று கவைஇ**
**வல்லோன் தைஇய வரிப்புனை பாவை"**

எனும் பாடல்வரிகள் மூலம் அறிய முடிகிறது. மேலும், துகில் என்னும் ஆடையானது மேலாடையாக (நெடுநல்.181) பயன்படுத்தப்பட்டுள்ளது. அறுவை என்னும் ஆடையானது நூலால் நெய்யப்பட்டு., நிலம் வரையில் தொங்கும் நிலையில் உடுத்தப்பட்டுள்ளது. (பதிற்34.3) கச்சு (அகம்.376.8) கச்சை (சிறுபாண்.238) முதலியவை இடுப்புப் பகுதியில் உடுத்தப்பட்டுள்ளன. கச்சை என்னும் ஆடையில் வேலைப்பாடு செய்யப்பட்டுள்ள செய்தினையும் அறியமுடிகிறது.

### பாண்டியனின் கையணி ஒப்பனை

கடகம் என்னும் ஒருவகையான கையணிகலனை, இருபாலரும் அணிந்துள்ளனர் என்பதற்கு முல்லைப்பாட்டு மற்றும் புறநானூற்றில் சான்றுகள் காணக்கிடைக்கின்றன. அதாவது, போர்க்களம் சென்றிருந்த பாண்டிய மன்னன், ஒரு கையைப் படுக்கையின் மேல் வைத்து, "கடகம்" அணிந்த ஒரு கையினால் முடியைத் தாங்கியிருந்தான், என்று முல்லைப்பாட்டு சான்று பகர்கின்றது. சான்றாக,

**"சோறுவாய்த்து ஒழிந்தோர் உள்ளியும்"**
**தோல்துமிபு**
**வைந்நுனைப் பகழி மூழ்கலின். செவிசாய்த்து**
**உண்ணாது உயங்கும் மாசிந் தித்தும்**
**ஒருகை பள்ளி ஒற்றி, ஒருகை முடியொடு**
**கடகம் சேர்த்தி,**
**நெடிதுநினைந்து"**

என்ற பாடல் வழியாக அறியலாம்.

சிவந்த சந்தனம் அழிந்த மார்பினையுடையவன் ஒளியுடைய பெரிய அணிகலன்களை அணிந்த, இளஞ்சிங்க ஏறு போன்ற, பகைவர்க்கு வருத்தத்தை உண்டாக்கும் வலிமையை உடையவன். இப்பொருளைப் புலப்படுத்தும் பாடல் வரிகள் பின்வருமாறு.

**"பொன்தொடி புதல்வர் ஓடி ஆடவும்**
**முற்று இழை மகளிர் முகிழ் முலை திளைப்பவும்**
**செஞ்சாந்து சிதைந்த மார்பின் ஒண்புண்**
**அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்**
**திருமாவளவன்"**

இவற்றிலிருந்து, ஆண்கள் பெரும்பாலும் கழுத்தணிகள் அணிவதற்குச் சில காரணங்களைக் கண்டியறிய முடிகிறது. கழுத்தணிகள் மிகவும் கடினமானதாகவும், அதிகமான சுமைகொண்டதாகவும் இருந்துள்ளதால், இவ்வணிகலன்களை ஆண்கள் அணிந்துள்ளனர் என்பதற்கான குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன.